# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1647/8 - 2010 මාර්තු 31වැනි බදාදා - 2010.03.31

*1647/8 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 94/47(II).*

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) என்னும் பிரிவினாலும், 21 (2) (ஆ) என்னும் பிரிவினாலும் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் புனித இடப்பரப்பு அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -*

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் "அம்பலாந்தோட்டை கிரிகண்டு ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) அம்பலாந்தோட்டை கிரிஹண்டு ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்புத் தொடர்பில் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டுமெனப் பணிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,
நகர அபிவிருத்தி மற்றும் புனித இடப்பரப்பு
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2010, மாச்சு 25.

**அட்டவணை**

**(எல்லைகளின் அட்டவணை)**

**கிரிகண்டு ரஜ மஹா விகாரை**

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிருவபத்துடுவ கிழக்கில் துவலுவில கிராமத்தில் அமைந்துள்ள கிரிகண்டு புராண ரஜ மஹா விகாரை என அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 466, இறுதிக் கிராம வரைபடத்தில் துண்டு 617 என அடையாளமிடப்பட்டு காணி அனைத்தும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : இறுதிக் கிராம வரைபடத்தின் 466 இல் காணித்துண்டு இல. 143- சி, 141, 143- சி, 141 மற்றும் வலவி ஆறு ;

கிழக்கு : வலவி ஆறு ;

தெற்கு : இறுதிக் கிராம வரைபடத்தின் 466 இல் காணித்துண்டு இல. 141- ஏ மற்றும் 139 - ஏ ;

மேற்கு : இறுதிக் கிராம வரைபடத்தின் 466 இல் காணித்துண்டு இல. 139- ஏ, பிரதேச சபை வீதி, காணித்துண்டு இல. 139- சி, 141, 143- சி மற்றும் இறுதியான கிராம வரைபடத்தின் 466 இல் 141.

2.1032 ஹெக்டேயார் விஸ்தீரணமாகக் கொண்டது.

4-393

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.